இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் நேற்று (24.11.2023) பெருநகர சென்னை மாநகராட்சி, தண்டையார்பேட்டை மண்டலம், வார்டு41, கொருக்குப்பேட்டை, சுண்ணாம்புக் கால்வாய் சாலையில் ரூ.10 கோடி மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள பல்வகை விளையாட்டுகளை உள்ளடக்கிய விளையாட்டு வளாகம் அமைப்பதற்கான பணியினை அடிக்கல் நாட்டி தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, மேயர் திருமதி ஆர்.பிரியா, வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி வீராசாமி, சட்டமன்ற உறுப்பினர்கள் ஜே.ஜே.எபினேசர் (ஆர்.கே.நகர்), ஐட்ரீம் ஆர். மூர்த்தி (இராயபுரம்), ஆர்.டி.சேகர் (பெரம்பூர்), துணை மேயர் மு.மகேஷ்குமார், கூடுதல் தலைமைச் செயலாளர்/ஆணையாளர் டாக்டர் ஜெ. ராதாகிருஷ்ணன், மண்டலக்குழுத் தலைவர் நேதாஜி யு.கணேசன், வடக்கு வட்டார துணை ஆணையாளர் கட்டா ரவி தேஜா, நிலைக்குழுத் தலைவர்கள் தா.இளைய அருணா (நகரமைப்பு), திருமதி சர்பஜெயாதாஸ் நரேந்திரன் (வரிவிதிப்பு (ம) நிதி), மாமன்ற உறுப்பினர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

சென்னை தலைமைச் செயலகத்தில் ரூ.37.22 இலட்சத்தில்

மேம்படுத்தப்பட்ட ஆண்கள்-பெண்கள் உடற்பயிற்சிக் கூடங்கள்!

அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் திறந்து வைத்தார்!

சென்னை, நவ.25-

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (24.11.2023) சென்னை தலைமைச் செயலகத்தில் ரூபாய்.37.22 இலட்சம் மதிப்பீட்டில் மேம்படுத்தப்பட்ட ஆண்கள் மற்றும் பெண்கள் உடற்பயிற்சிக் கூடங்களைத் திறந்து வைத்தார்.

சென்னை தலைமைச் செயலகத்தில் இயங்கி வந்த ஆண்கள் மற்றும் பெண்களுக்கான உடற்பயிற்சிக் கூடங்களை புதுப்பித்திட வும் பழுதடைந்த தரைப்பலகை, மின் சாதனங்கள், கழிவறை சாதனங்கள், உடற்பயிற்சி உபகரணங்களை சீரமைத்து நவீனப் படுத்திடவும் மற்றும் கூடுதலாக டேபிள் டென்னிஸ் மேடை ஏற்படுத்திடவும் தலைமைச் செயலக அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட் டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களிடம் கோரிக்கை விடுத்தனர்.

அதனடிப்படையில் ஆண்கள் உடற்பயிற்சி கூடம் ரூபாய்.17.8 இலட்சம் மதிப்பீட்டிலும், பெண்கள் உடற்பயிற்சி கூடம் ரூபாய்.14.58 இலட்சம் மதிப்பீட்டிலும் புதுப்பிக்கப்பட்டுள்ளது. மேலும் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் சார்பில் உடற்பயிற்சி உபகரணங்கள் சீரமைத்து நவீனப்படுத்துதல் மற்றும் பெண்கள் உடற்பயிற்சி கூடத்தில் புதிதாக டேபிள் டென்னிஸ் விளையாட வசதியாக டேபிள் டென்னிஸ் மேடை அமைத்தல் ஆகிய பணிகள் ரூபாய். 4.84 இலட்சம் செலவில் முடிக்கப்பட்டுள்ளது. இந்த மேம்படுத்தப்பட்ட உடற்பயிற்சி கூடங்களை இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (24.11.2023) திறந்து வைத்தார்.

இந்த நிகழ்ச்சியில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமை செயலாளர் முனைவர். அதுல்யா மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ. மேகநாத ரெட்டி, தமிழ்நாடு தலைமைச் செயலகச் சங்கத் தலைவர் கு. வெங்கடேசன், செயலாளர் சு. ஹரி சங்கர், இணைச் செயலாளர் (பொது) இரா. லெனின், இணைச் செயலாளர் [வி (ம) ப] அ. ஜீவன் மற்றும் பொருளாளர் சே. பிரபா ஆகியோர் உட்பட அரசு அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

திரு.வி.க நகர் தொகுதியில் சோதனை முறையில் மக்களுடன் முதல்வர் திட்டத்தினை பொதுமக்கள் பல வகையான சேவைகளை ஒரே இடத்தில் பெறவும், அவர்களின் மனுக்கள் மீது அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்கவும், வெவ்வேறு துறை சார்ந்த பிரச்சினைகளுக்கு ஒரே இடத்தில் தீர்வு காணும் வகையில் தமிழக அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. அந்த வகையில் சென்னை மாநகராட்சியில், மக்களுடன் முதல்வர் என்ற புதிய திட்டம் தொடங்கப்பட்டு நேற்று முன்தினம் சென்னையில் 3 இடங்களில் சோதனை அடிப்படையில் அந்த திட்டத்திற்கான சிறப்பு முகாம் நடத்தப்பட்டது. இம்முகாமை ப.தாயகம்கவி எம்.எல்.ஏ. பார்வையிட்டார்.

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் நேற்று (24.11.2023) சென்னை தலைமைச் செயலகத்தில் ரூபாய்.37.22 இலட்சம் மதிப்பீட்டில் மேம்படுத்தப்பட்ட ஆண்கள் மற்றும் பெண்கள் உடற்பயிற்சிக் கூடங்களைத் திறந்து வைத்தார். இந்த நிகழ்ச்சியில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமை செயலாளர் முனைவர். அதுல்யா மிஸ்ரா, , தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ. மேகநாத ரெட்டி, தமிழ்நாடு தலைமைச் செயலகச் சங்க நிருவாகிகள் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

திரு.வி.க நகர் தொகுதியில்

சோதனை முறையில் மக்களுடன் முதல்வர் திட்டம்!

ப.தாயகம்கவி எம்.எல்.ஏ. பார்வையிட்டார்!

சென்னை, நவ.25-

பொதுமக்கள் பல வகையான சேவைகளை ஒரே இடத்தில் பெறவும், அவர்களின் மனுக்கள் மீது அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்கவும், வெவ்வேறு துறை சார்ந்த பிரச்சினைகளுக்கு ஒரே இடத்தில் தீர்வு காணும் வகையில் தமிழக அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. அந்த வகையில் சென்னை மாநகராட்சியில், மக்களுடன் முதல்வர் என்ற புதிய திட்டம் தொடங்கப்பட்டு நேற்று முன்தினம் சென்னையில் 3 இடங்களில் சோதனை அடிப்படையில் அந்த திட்டத்திற்கான சிறப்பு முகாம் நடத்தப்பட்டது.

திருவிக நகர் தொகுதிக்கு உட்பட்ட நடைபெற்ற மக்களுடன் முதல்வர் திட்ட முகாமில் 341 மனுக்கள் பெறப்பட்டன. அந்த மனுக்கள் மீது 15 நாட்களுக்குள் தீர்வு காணப்படும் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

பொதுமக்கள் பல வகையான சேவைகளை ஒரே இடத்தில் பெறவும், அவர்களின் மனுக்கள் மீது அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்கவும், வெவ்வேறு துறை சார்ந்த பிரச்னை களுக்கு ஒரே இடத்தில் தீர்வு காணும் வகையில் தமிழக அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. அந்த வகையில் சென்னை மாநகராட்சியில், மக்களுடன் முதல்வர் என்ற புதிய திட்டம் தொடங்கப்பட்டு நேற்று முன்தினம் சென்னையில் 3 இடங்களில் சோதனை அடிப்படையில் அந்த திட்டத்திற்கான சிறப்பு முகாம் நடத்தப்பட்டது.

இதில் 10 துறை சார்ந்த அதிகாரிகள் மற்றும் அதன் ஊழியர்கள் கலந்து கொண்டனர்.

முகாமில் பெறப்படும் மனுக்கள் இணையதளத்தில் பதிவு செய்யப்பட்டு 15 நாட்களுக்குள் தீர்வு காணப்படும்.

அந்த வகையில் திரு.வி.க நகர் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட 74வது வார்டில் மக்களுடன் முதல்வர் திட்ட முகாம் நேற்று முன்தினம் ஓட்டேரி ஸ்டாரன்ஸ் ரோடு பகுதியில் உள்ள திரு.வி.க நகர் மண்டல அலுவலகத்தில் நடைபெற்றது.

மத்திய வட்டார துணை ஆணையர் பிரவீன் குமார் தலைமை வகித்தார். மண்டல அதிகாரி முருகன், செயற்பொறியாளர் சரவணன், மற்றும் துறை சார்ந்த அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

இதில் மின்சார வாரியம் சார்பில் புதிய மின் இணைப்பு, மின் கட்டணம் மாற்றங்கள், மின் இணைப்பு பெயர் மாற்றம் உள்ளிட்ட சேவைகள் வழங்கப்பட்டன.

இதேபோல் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை சார்பில் பட்டா மாற்றுதல், நில அளவீடு, வாரிசு சான்றிதழ், இருப்பிடச் சான்றிதழ் உள்ளிட்ட சேவைகளும், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை ஊரக வளர்ச்சி துறை சார்பில் கட்டுமான வரைபட ஒப்புதல் வழங்குதல், சொத்து வரி, குடிநீர் வரி, பெயர் மாற்றங்கள், குடிநீர் இணைப்பு, பிறப்பு இறப்பு சான்றிதழ் உள்ளிட்ட சேவைகளும் வழங்கப்பட்டன.

மேலும் காவல்துறை சார்பில் பொருளாதார குற்றங்கள் தொடர்பான புகார்கள், நில அபகரிப்பு, வரதட்சணை சட்டத்தின் கீழ் உண்டான புகார்கள் பெறப்பட்டன.

மாற்றுத்திறனாளிகள் துறை சார்பில் மாற்றுத்திறனாளிகளுக்கான வாகனங்கள் பெறுவது தொடர்பாகவும், சுயதொழில், வங்கி கடன் உதவி, கல்வி உதவித் தொகை, தொழிற்பயிற்சி உள்ளிட்ட பல்வேறு உதவிகள் சம்பந்தமான மனுக்கள் பெறப்பட்டன.

வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை சார்பில் கட்டுமான வரைபட ஒப்புதல் வழங்குதல், வீட்டு வசதி வாரியம் சார்பில் வழங்கப்பட்ட ஒதுக்கீடுகளுக்கு விற்பனை பத்திரம் வழங்குதல், நில உபயோக மாற்றத்திற்கான தடையில்லா சான்று வழங்குதல் உள்ளிட்ட சான்றிதழ் வழங்கப்பட்டன.

இதேபோன்று சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை சார்பில் புதுமைப்பெண் கல்வி உதவித்திட்டம், பெண் குழந்தைகள் பாதுகாப்பு திட்டம், மகளிர் சுய உதவி குழுக்களுக்கான திட்டங்கள் சம்பந்தமாக பல்வேறு மனுக்கள் பெறப்பட்டன.

இவ்வாறு ஒரே இடத்தில் பல துறை சார்ந்த அதிகாரிகள் சேவைகளை வழங்கியதால் பொதுமக்கள் அதிகளவில் அங்கு குவிந்தனர். இதில் தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி துறை சார்பில் 141 மனுக்களும், வேலை வாய்ப்பு சம்பந்தமாக 47 மனுக்களும், சென்னை மாநகராட்சிக்கு 89 மனுக்களும், இதர துறை சார்பில் பல்வேறு மனுக்கள் என மொத்தம் 341 மனுக்கள் பெறப்பட்டுள்ளன.

இந்த மனுக்கள் மீது 15 நாட்களுக்குள் தீர்வு காணப்படும் என அதிகாரிகள் கூறினர். மேலும், ஒரே இடத்தில் குறிப்பிட்ட ஒரு பகுதியில் வசிக்கும் மக்கள் பல்வேறு துறை சார்ந்த அதிகாரிகள் மற்றும் அலுவலர்களை நேரில் சந்தித்து தங்களது குறைகளை தெரிவித்து அதனை நிவர்த்தி செய்து கொள்வது பொதுமக்களுக்கு பயனுள்ளதாக இருப்பதாகவும், சோதனையின் அடிப்படையில் தற்போது தொடங்கப்பட்டுள்ள இந்த திட்டம் ஒவ்வொரு வார்டு வாரியாக விரிவுபடுத்தப்பட உள்ளதாகவும் அதிகாரிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. சென்னையில் 3 இடங்களில் நடைபெற்ற இந்த சோதனை திட்டத்தில் முகாம் நடைபெறும் இடத்தினை திரு.வி.க.நகர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் வழக்கறிஞர் ப.தாயகம்கவி ஆய்வு செய்து பொதுமக்களிடம் குறைகளை கேட்டறிந்தார்.

கா.தாமரைச்செல்வன் - இ.கண்ணப்பன் - பி.எஸ்.சந்துரு - வி.ஆர்.குப்பன் முன்னிலை!

மாதவரம் வடக்கு பகுதியில் இருசக்கர வாகனப் பேரணி - உற்சாக வரவேற்பு!

புழல் எம்.நாராயணன் தலைமை! மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. பங்கேற்பு!

சென்னை, நவ. 25

இளைஞர் நலன் விளையாட்டுத்துறை மற்றும் சிறப்பு செயலாக்கத் திட்டத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களால் சேலத்தில் நடைபெறும் இளைஞரணி மாநாட்டை பொதுமக்களிடம் கொண்டு சேர்க்கும் வகையில் கன்னியாகுமரியில் துவக்கி வைக்கப்பட்ட வாகன பேரணியில் கலந்து கொண்ட இளைஞர் அணியினருக்கு மாதவரத்தில் சீர்வரிசையுடன் கூடிய உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.

அண்ணா மண்டலத்திற்கு உட்பட்ட சென்னை வடகிழக்கு மாவட்டத்தில் வாகனப் பேரணி அணிவகுத்து மாதவரம் சட்டமன்ற தொகுதிக்கு வருகைதந்தனர். மாதவரம் வடக்கு பகுதி தி.மு.க.விற்கு உட்பட்ட மாத்தூர் 19 வது வட்டம் வழியாக வருகை தந்த வாகன பேரணியில் கலந்து கொண்டவர்களுக்கு மாத்தூர் முதல் பிரதான சாலை அருகே மாதவரம் வடக்கு பகுதிச் செயலாளர் புழல் எம்.நாராயணன் தலைமையில் கழகத்தினர் உற்சாக வரவேற்பு அளித்தனர்.

19 வது வட்டச் செயலாளர் மாத்தூர் கா.தாமரைச்செல்வன் வரவேற்பில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சிக்கு மாவட்டத் துணைச் செயலாளர் அறிவழகி பாலகிருஷ்ணன், இ.கண்ணப்பன், பி.எஸ்.சந்துரு, வி.ஆர். குப்பன், கே.கருணாகரன், கே. அன்புசாமி, கே.சிவசங்கரன், கவுன்சிலர் ஆ.ராஜேந்திரன், பி.நிர்மல்குமார், பா.சந்திரன், வி.கார்த்திகேயன், நா.மோகன் குமார், நாகூரார் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

பேரணியில் கலந்து கொண்ட இளைஞர் அணியினருக்கு மாதவரம் வடக்கு பகுதி தி.மு.க. சார்பில் பகுதிச் செயலாளர் புழல் எம்.நாராயணன் ஏற்பாட்டில் நாதஸ்வரம் மற்றும் பேண்ட் வாத்தியம் முழங்க தாம்பூல தட்டுடன் அனைத்து வகையான பழங்கள் இனிப்பு மற்றும் அனைவருக்கும் சந்தன மாலை அணிவித்து கலைஞரின் புத்தகம் ஆகியவற்றை பரிசுகளாக மாவட்டச் செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. வழங்கி உற்சாகப்படுத்தினார்.

நீட் தேர்வை ரத்து செய்ய வேண்டும் என கோரி பொதுமக்களிடம் துண்டு பிரசுரங்கள் வழங்கப்பட்டு தபால் அட்டைகளில் கையெழுத்து பெறப்பட்டது.

தொடர்ந்து பேரணி செல்லும் வழிகளில் நீட் எதிர்ப்பு துண்டு பிரசுரங்கள் வழங்கப்பட்டு பொது மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

இந்த நிகழ்ச்சியில் ஆர். டி.மதன்குமார், கேபிள் த. கணேசன், மஞ்சம்பாக்கம் ஆர். பாபு, கே.எழுமலை, எஸ்.உதயகுமார், பா.கோபிநாத், பேன்சி ரமேஷ், பி.ஜெயராஜ், துரை, தசரதன், சேரலாதன், பீர் முகமது, எஸ்.சிவகுமார், கே.சண்முகபிரியன், டி.வினோத், ஜி.ராஜ்குமார், எம்.என்.அஜய் தென்னவன், த.விக்னேஸ்வரன், என்.பிரபு, அனிஷ், சசிதரன், பிரபு, இ.அருள், கே.ஏ. ரமேஷ், சி.முத்தையா, எம். மகேஷ்குமார், எலந்தனூர் சிவப்பிரகாஷ், வக்கீல் பி. கே.கண்ணன், சி.எம்.ராஜா, டோமினிக், பிரான்சிஸ், தேவராஜ், செமின் எடிசன், மணிகண்டன், ஹேமந்த், எம்.கிருபாகரன், குளக்கரை மஞ்சு நாதன், ரிஷி, வினோத், மகேஷ், சுரேஷ், சி.மூர்த்தி, சி.பாலாஜி, என்.நாகராஜன், வி.சுமீர், பூபாலன், சுதர்சன், எம்.ஜான்சன், எம்.மைக்கேல், பி.செந்தில், ஜி.முனிவேல், ஜி.செல்வம், கமலக்கண்ணன், எம்.என்.தளபதி, விக்கி, விஜய், பாஸ்கர், ஜோசப் (எ) விஜயன், நாகலிங்கம், கீர்த்தி, சுரேஷ், முனுசாமி, கொசப்பூர் விஜயன், முத்தையன், தினகரன், கார்த்திக், சுமன், பாரதிராஜா,

ஜி.சரவணன், ஆர்.திருமலை, துளசி, ரகுவரன், கோவர்த்தனன், இ.கதிரவன், ஹரி, சுப்பிரமணி, கன்னியப்பன், ராஜ், கே.குமார், கே.விஜயகுமார், தமிழரசன், அத்திக்குளம் தேவி, அண்ணாதுரை, ஜானகிராமன், கங்காதரன், சுரேஷ்குமார், கலைச்செல்வி, சேவை செல்வராஜ், செல்வகுமார், நாகராஜ், சாந்தகுமார், கோபிநாத், பிரவீன்குமார், ஞானசேகர், சுந்தரி, மீனா, குமாரி, ராஜேஷ், கண்ணன், ஹரி, பிரசாத், முகமது, முஸ்தபா, காசி, சுமன், மணிகண்டன், சிவராஜன், சிவராமன், து.எழில்குமார், டி.நெல்சன் ராஜ், டி.ராஜாராம், உதயகுமார், க.ந.க.சைமன், தீபக், அனுராக் பவா, ராமச்சந்திரன், முத்துக்கிருஷ்ணன், பார்த்திபன், சுதாகர், பார்பன் சாமிநாதன், ஹரி, வாசுதேவன், சுந்தர் உள்ளிட்ட ஏராளமான தி.மு.க.வினர் கலந்து கொண்டு வாகன பேரணியில் வந்தவர்களுக்கு உற்சாக வரவேற்பு அளித்தனர்.

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுதுறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களால் துவங்கி வைக்கப்பட்ட டிசம்பர் 17 இளைஞரணி மாநாடு விளக்க இளைஞர் அணியின் இருசக்கர வாகன பேரணி மாத்தூர் 19வது வட்டம் வழியாக வருகை தந்தபோது, மாதவரம் வடக்கு பகுதி தி.மு.க. சார்பில், பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் தலைமையில், வட்டச் செயலாளர் மாத்தூர் கா.தாமரைச்செல்வன் வரவேற்பில், அறிவழகி பாலகிருஷ்ணன், இ.கண்ணப்பன், வி.ஆர்.குப்பன், பி.எஸ்.சந்துரு, கே. கருணாகரன், கே.அங்குசாமி மற்றும் பகுதி கழக, வட்ட கழக நிர்வாகிகள் முன்னிலையில், மாவட்டச் செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. மாலை அணிவித்து, புத்தகங்கள் வழங்கி வாழ்த்து தெரிவித்தார்.